## 180. உலோகமாபாலன் கதை

முன்னாளில் வாரணவாசி என்னும் நகரில் உலோகமாயாலன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். இவன் அனைவருக்கும் நல்லவனாகச் சிறந்து திகழ்ந்தான் . இவனுடைய இசை திசைதோறும் பரவி நின்றது. அந் நாளில் சதகன் என்னும் பெயருடைய சிற்றறிஞன் ஒருவன் இருந்தான். அவன் கணித நூலில் நல்ல புலமையுடையவன். அவன் இவனையடைந்து புகழ்ந்து இவனோடு நட்பு
கொண்டிருந்தான். அவன் விரும்பியவைகளை இவன் நாளும் வழங்கி அவனைத் தாங்கி வந்தான். இவ்வாறு நாட்கள் பல சென்றன. இருவரும் சிறந்த நண்பர்கள் என்று பலரும் எண்ணியிருந்தனர்.

இவ்வாறிருக்குங்கால் அரசனுக்குக் கொடிய நோய் ஒன்று உண்டாகியது. அந்நோய் எவராலுந் தீர்த்தற்கு முடியாததாக இருந்தது. அனைவரும் அரசனுடைய நிலையைக் கண்டு வருந்தினர். அரசன் நாம் இனிமேல் நாடாளுவதாற் பயனில்லை என்று முடிவு செய்தான். ஆட்சியை மகன்பால் அளித்து ஒதுங்கியிருந்தான். முன்பு இவனிடம் நெருங்கி நின்று பல உதவிகளைப் பெற்ற சதகன் இப்பொழுது நெருங்காமல் அகன்று போனான். அவனுடைய பண்பை அனைவரும் வெறுத்தனர். அரசனும் அச்சதகனுடைய உண்மை நிலையை உணர்ந்துகொண்டு அவனுடைய நட்புத் தொலைந்ததே நல்லதென்று உள்ளங்களித்தான். செல்வமுள்ளபொழுது சேர்ந்திருத்தலும் இல்லாதபொழுது அகன்று போதலுமுடைய தீயோர்களுடைய நட்பு இருத்தலைவிட இல்லாதிருத்தல் நல்லது என்பதை இவன்பால் உலகம் உணர்ந்தது.

(பயனை நாடி நிற்போர் நட்பு)



181. உலோலுபன் கதை

சயசேன மகாராசன் என்பவன் ஒரு சிவனாலயங் கட்டுவிக்கும் பொருட்டுச் செங்கற்களைத் தன்னுடைய வேலைக்காரர்கள் மூலமாகக் கொண்டுவரச் செய்திருந்தான். அப்பொழுது அவ்வரசனுடைய நகரத்தில் இருந்த உலோலுபன் என்னும் பிட்டு வாணிகன் ஒருவன் செங்கற்கள் கொண்டுவரும் வேலைக்காரர்களில் ஒருவனுக்குப் பிட்டு முதலியன கொடுத்து அவனிடமிருந்து சில செங்கற்களைத் தன்னுடைய வேலைக்காக வாங்கி வைத்தான்.



அவைகளில் ஒரு செங்கல்லில் பொன் துண்டம் காணப்பட்டது. அதைக் கண்டவுடனே அவன் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தான். எல்லாவற்றிலும் இவ்வாறே பொன் துண்டம் இருக்கும் என்று எண்ணினான். மேலுஞ் செங்கற்களை வாங்கி வைக்க வேண்டுமென்று பேரவாக் கொண்டான். முன் செங்கற்கள் கொடுத்தவனுக்குப் பிட்டு முதலியன மேலுங் கொடுத்துச் செங்கற்களை மறைமுகமாக வாங்கிச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தான். ஒருநாள் இவன் தன்னுடைய மகள் வீட்டிற்குப் போய் வரும்படியான் வேலை ஏற்பட்டது. செங்கற்கள் வாங்குவதை ஒருநாள்கூட நிறுத்தக் கூடாதென்று எண்ணினான். பிட்டு முதலியன கொடுத்துக் கல்லை வாங்கி வைக்குமாறு தன்னுடைய மகனிடங் கூறிவிட்டுத் தான் தன்னுடைய மகள் வீட்டிற்குப் போய் வந்தான். தான் இல்லாத சமயத்தில் தன்னுடைய மகன் செங்கற்களை வாங்கி வைக்கவில்லையென்று அறிந்தான். பேரவாவினால் அவனுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. தன் மகனுடைய தலையில் அடித்ததோடு, செங்கற்கள் வாங்குவதை விட்டுவிட்டு ஊருக்குச் சென்ற தன்னுடைய கால்களீலும் அடித்துக்கொண்டான். இச்செய்தி அரசனுக்குத் தெரிந்தது. அவன் தன்னுடைய சேவகர்களை விட்டு இவனைப் பலவாறு வருத்திக் கொலை புரியுமாறு கட்டளையிட்டான். பேரவாக் கொண்டவர்கள் அழிந்தொழிவது திண்ணம்.

(உலுத்தன் பேரவா]

(நரிவிருத்தம்)



182. உழு தொழிலாளனும் வணிகர்களும்

ஓர் உழு தொழிலாளன் மண்வெட்டும்பொழுது கீழே புதைந்து பாசியேறிக் கிடந்த பொன் கலம் ஒன்றைக் கண்டெடுத்தான். அதனைப் பொன் என்று அறியாமல் ஒரு செட்டியிடங் காட்டினான். அவன் அதனைப் பொன்னென்றறிந்து, "இதற்கு விலை யாது?" என்று உழு தொழிலாளனைக் கேட்டான். உழு தொழிலாளன் அதற்கு நாழி மிளகு வேண்டும் என்றான். செட்டி ஒரே முறையில் விலையை முடிவு செய்து விடக்கூடாது; ஆழாக்குத் தருகிறேன்; உரி தருகிறேன் ; என்று பேரம் பேசினான். இவனை இப்பொழுது அனுப்பி விட்டுப் பிறகு நாழி மிளகையும் கொடுத்து வாங்கினால்தான் இவன் ஐயப்படாமல் இருப்பான் என்று முடிவு செய்து உழு தொழிலாளனை அப்பொழுது அனுப்பிவிட்டான். உழு தொழிலாளன் உடனே மற்றொரு செட்டியிடம் கொண்டு போய்க் காட்டினான். அவன் அக்கலத்தை மறிந்துகொண்டு நாழி மிளகையும் உடனே கொடுத்து அக்கலத்தைப் பெற்றுக்கொண்டான். அதனுடைய பாசி போகத் தேய்த்துக் கழுவும் பொருட்டு மிக ஆழமான ஒரு பாழுங் கிணற்றருகே சென்று அதனைத் தேய்த்துக் கழுவினான். அது கையை விட்டு நழுவிப் பாழுங் கிணற்றில் வீழ்ந்து மறைந்து போய்விட்டது. அதனைக் கண்டு அவன் மயங்கிக் கழுவாமலிருந்திருக்கலாமே என்று பிதற்றிக் கொண்டு செத்தான். முன்பு அக்கலத்தை வாங்காமல் விட்ட செட்டி அப்பொழுதே நாழி மிளகையுங் கொடுத்து வாங்காமற் போனோமே என்று பிதற்றிச் செத்தான். பேரவாக்காரர்களுக்கு எப்பொழுதுந் தொல்லையே உண்டாகும்.

[பேரவா ]

(நரி விருத்தம்)



183. எச்சிலை நுகர்ந்த கதை

வரகுணபாண்டிய மன்னன் அரசாட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் சிவனடியார் ஒருவர் இறைவனுடைய எண்ணெய்க் காப்புக்காகச் சிறந்த எள்ளைத் தேடி வெயிலில் காயவைத்தனர். வழிச்சென்ற ஒருவன் அவ்வெள்ளில் ஒரு பிடியை அள்ளி வாயிலிட்டுக்கொண்டனன். சிவனடியார் அவனைப் பிடித்துக்கொண்டார். "நீ இறைவன் பொருட்டுக் காயவைத்திருந்த எள்ளைக் களவுசெய்து வாயிற்போட்டுக் கொண்டாய்; அதனை விழுங்காதே, இறைவன்மேல் ஆணை" என்று ஆணையிட்டுத் தடுத்து அவன் எள்ளை விழுங்காமற் செய்து வரகுணபாண்டியன் முன்னர்க் கொண்டுபோய் விட்டு நிகழ்ந்ததைக் கூறினார்.




அரசன் எள்ளள்ளி வாயிலிட்டானைப் பார்த்து ''அறிவற்றவனே! இறைவன் பொருட்டுக் காயவைக்கப்பட்டிருந்த எள்ளினை ஏன் அள்ளினாய்?" என்று உசாவினான். அவன், "அரசே! இவர் திருமுழுக்கின்பொருட்டு எள் கொடுத்துச் சிவகதியடைய எண்ணுகிறார். அடியேன் இனிமேல் வரும் பிறப்பில் அதனையாட்டும் எருதாகப் பிறந்து அந்நல்வினையைப் பெறக் கருதினேன் அதன்பொருட்டே இவ்வாறு செய்தனன்" என்று கூறினான்.

அரசன் இருக்கையினின்று திடீரென்று குதித்தான் "ஆனால் எண்ணெய் ஆட்டுஞ் செக்கினை இழுக்கும் எருதுகள் இரண்டன்றோ? அவற்றில் நீ ஓர் எருதாயின் நான் ஓர் எருதாகின்றேன். அதனால் எனக்கும் நல்வினை கிடைக்குமன்றோ?” என்று கூறினார். அவன் வாயில் இருந்த எள்ளிற் பாதியைத் தாம் வாங்கியுண்டார்.

''வழிபடுமொருவன் மஞ்சனத் தியற்றிய செழுவிதை யெள்ளைத் தின்னக்கண்டு பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்."

[இறைபணியில் அன்பு] (திருவிடைமருதூர் மூம்மணிக்கோவை)




184. எச்சில் நீரை முழுக்காட்டிய கதை

கண்ணப்பர் திருக்காளத்திமலையில் இறைவனைக் கண்டார். அன்புகொண்டார். பூசித்துவழிபட எண்ணினார். நீரையூற்றிப் பச்சிலையை அணிந்து உணவு படைப்பது பூசை என்று அறிந்தார். பொன் முகரியாற்று நீரை வாயில்முகந்து கொண்டார். மலர் பச்சிலை முதலியவைகளைப் பறித்துத் தலையில் உள்ள குடுமியில் வைத்துக்கொண்டார். தொன்னையொன்றில் பன்றியூனையெடுத்துக்கொண்டு காளத்திமலை மீது ஏறினார்.காற்செருப்பால் பழைய பூக்களையகற்றினார். வாயில் இருந்த நீரை உமிழ்ந்து திருமுழுக்குச் செய்தார். குடுமியில் வைத்திருந்த பச்சிலை மலர் முதலியவைகளை இறைவனுக்கு அணிந்தார்; பன்றியூனைப் படைத்தார். பிறகு இறைவனைக் காத்திருந்தார். நாட்கள் ஐந்து சென்றன. ஆறாவது நாள் இறைவனுடைய கண்ணில் இருந்து குருதி வந்தது. அதனைக் கண்டு வருந்தினார். தம்முடைய கண்ணொன்றைத் தோண்டி இறைவனுடைய கண்ணில் அப்பினார். மற்றொரு கண்ணில் நின்றுங் குருதி வந்தது. கண்ணிருக்குமிடத்தை யறிந்துகொள்ளச் செருப்புக்காலைக் கண்ணிருக்குமிடத்தில் ஊன்றிக்கொண்டு மற்றொரு கண்ணை யுந் தோண்டலானார். கண்ணப்பருடைய மெய்யன்புக்கு மகிழ்ந்த பரமன் ஆறே நாளில் கண்ணப்பருக்கு வீடுபேற்றை யருளினார்.

"புனவேடன்; பச்சிலைக்கும் வாய்க்குள் எச்சிலுக்கும் வீக்கு பச்சிலைக்கும் ஆட்கொளரன் வாழ்வே"

(திருப்புகழ் )

"தொண்டு செய்து நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்லன்" (பட்டினத்தார்)

[கண்ணப்பர் வீடுபேறு]



185. எருக்கு முளைத்ததில்லை என்ற கதை

துருவாச முனிவர் கூத்தப்பிரானைப் போற்றிவழிபடும் பொருட்டுத் தில்லைக்கு வந்தார். அவருக்கு உணவு அகப்படவில்லை. அதனாற் சினங்கொண்ட அவர், " எருக்கு முளைத்ததில்லை ஈசனுமில்லை " என்று பாடத் தொடங்கினார். உடனே சிவகாமியம்மையார் பார்ப்பனச் சிறுமியைப்போல் வந்து அமுது படைத்தருளினார். அதனையுண்டு பசி தீர்ந்த துருவாசர், "எருக்கு முளைத்ததில்லை ஈசனுமிங்குண்டு" (எருக்கு முளைத்தது இல்லை) என்று பாடினார்.

"வானமுல கேத்துதுரு வாசர்பசி யாறவுமை போனகமளிக்கும் புலியூரே"
துருவாசர் வசை ]

(புலியூர் வெண்பா)



186. எருதாக வந்த அரக்கன் கதை

கண்ணனைக் கொல்லுமாறு கம்சன் அரிட்டன் என்னும் அசுரனை ஏவினான். அவ்வரக்கன் எருதுவடிவங்கொண்டு ஆக்களையெல்லாம் முட்டினான். இடைச்சேரியை அச்சுறுத்திக்கொண்டு திரிந்தான். கண்ணனுடைய வயிற்றிலே முட்டிக்கொல்ல வேண்டுமென்று கண்ணன் வயிற்றில் கண் வைத்துக்கொண்டு ஒரு நாள் கண்ணன் மீது பாய்ந்தான். கண்ணன் அவ்வெருது அசையமுடியாமல் அதன் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு தன் காலினால் அவ்வெருதின் வயிற்றில் உதைத்தான். அதன் கழுத்தைப் பிடித்துக் கசக்கினான். கொம்புகளில் ஒன்றைப் பறித்து அதனாலேயே அவ்வெருதை அடித்துக்கொன்றான்.

[கண்ணன் ஆடல்]



187. எலும்பணிந்த கதை

எல்லாப் பொருள்களும் அழிந்தொழியும் ஊழிக்காலத்திலே அழியாது நிற்கும் பொருள் தாம் ஒருவரே என்பதைச் சிவபெருமான் உலகிற்கும் நான்முகன் திருமால் முதலிய தேவர்கட்கும் உணர்த்த எண்ணினார். ஒவ்வோர் ஊழியிலும் அழிகின்ற நான்முகர்களுடைய எலும்புகளையும் திருமால்களின் எலும்புகளையும் மாலையாகத் தொடுத்து கழுத்திலே மாலையாக அணிந்துகொண்டார். இதனால் சிவபெருமானுக்கு என்பணிபூண்டோன் என்றொரு பெயர் உண்டாகியது. இறைவன் அணிந்திருக்கும் எலும்பு மாலை முழுமுதற் பொருள் சிவபெருமானே என்பதை அனைவருக்கும் உணர்த்திக்கொண்டிருக்கிறது.

(என்பு அணிதல்)



188. எலும்பு பெண்ணான கதை

தொண்டைவள நாட்டிலே திருமயிலாப்பூரிலே சிவநேசச் செட்டியார் என்னும் பெயருடையவர்ஒருவர் திருஞானசம்பந்தர் காலத்திலே வாழ்ந்திருந்தார். இவர் திருஞானசம்பந்தரிடத்தில் பேரன்புடையவர். இவருக்குப் பூம்பாவை என்னும் பெயருடைய மகள் ஒருத்தி இருந்தாள். செட்டியார் தம்முடைய மகளைத் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கே திருமணஞ் செய்து கொடுக்கவேண்டும் என்று எண்ணமிட்டு முடிவு செய்திருந்தார். அப்பெண் ஒரு நாள் பாம்பு கடித்தபடியால் இறந்தாள். சிவநேசச் செட்டியார் பூம்பாவையை எரித்து எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் அடைத்துவைத்திருந்தார். திருஞான சம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்தபொழுது அவரைத் திருமயிலைக்கு அழைத்துச் சென்றார். பெண்ணின் எலும்பிருந்த குடத்தைப் பிள்ளையார் திருமுன்புவைத்து நிகழ்ந்ததைத் தெரிவித்தார். பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சென்று பதிகம்பாடினார். அவ்வளவில் எலும்பு பெண்ணாகியது. பூம்பாவை குடத்தில் இருந்து வெளியேவந்தாள்.

பழைய என்பு பொற்பாவையதாகுமே

(பெரிய புராணம்)

(எலும்பு பெண்ணானது]



189. எல்லன் கதை

எல்லன் என்பவன் தொண்டைவள நாட்டில் குன்றையூரில் வாழ்ந்திருந்த ஒரு பெருஞ் செல்வன். வேளாண் மரபில் தோன்றியவன். தாளாண்மையில் தலை சிறந்து மிளிர்ந்தவன். இவனுக்கு விளை நிலங்கள் மிகுதியாக இருந்தன. அவைகளில் இருந்து கிடைத்த நெல்லையெல்லாம் இரவலருக்கு உதவி செய்வதற்கே இவன் பயன்படுத்தினான்.

இவனுடைய வீட்டில் ஏழை எளியவர்கள் உணவுண்டு பசியாறினர். பலரோடு சாப்பிட்டால்தான் இவனுக்கு மன நிறைவாக இருக்கும். "உண்டிக் கழகு விருந்தோடுண்டல்" என்பதற்கு இவன் சரியான எடுத்துக்காட்டாக விளங்கினான். இவனுடைய வீட்டில் சமையல் நடந்தால் எளியவர்கள் தங்களுடைய பசி தணியும் என்று உள்ளங்களிப்பார்கள். எல்லனோ சமையல் நடப்பது எளியவர்களுக்காக என்று எண்ணுவானே தவிரத் தனக்காக என்று எண்ணமாட்டான். ' இவனுடைய தன்மையை அறிஞர்கள் வியந்து பாராட்டிப் பாடினார்கள்.

மிகுதியாகச் சேர்த்த செல்வத்தைப் பிறருக்குப் பயன்படுத்தாது தாம் மட்டும் தனியே உண்ணுதல் ஐயமெடுட்பதைக் காட்டினும் மிகவுந் துன்பந் தருவதாம். ஆகவேரோடுதான் உண்ணுதல் வேண்டும் என்று தமிழ் மறை நூல் சாற்றியது இவனிடத்தில் சிறந்து விளங்கியது.

"ஆலெங்கே யங்கே அரும்பறவை ஆல்துயிலும் மாலெங்கே யங்கே
மலர்மடந்தை - சோலைதொறும் செங்கே தகைமணக்கும் செங்குன்றை
எல்லனெங்கே அங்கே இரவலரெல் லாம் ".

(தனிப்பாடல்

(எல்லன் உணாக்கொடை]



190. எல்லா உயிர்களும் அடிபட்ட கதை

பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் பாசு பதக்கணையைப் பெறும்பொருட்டு இறைவனை நோக்கிச் கடும் தவம் புரிந்தான். அப்போது இறைவன் வேட்டுவச் கோலமாக வெளிப்பட்டருளினார். இறைவனுக்கும் அருக்சுனனுக்கும் முன்னர்ச் சொற்போர் மூண்டு பின்னர் மறபோரும் மூண்டது. அப்போது அருச்சுனன் வேட்டுவச் கோலத்தில் இருந்த இறைவனை வில்லால்

அடித்தான். அவ்வடி உலகத்தில் உள்ள எல்லா உயிர்த்தொகைகளின் மீதுப்பட்டது. அதனை வில்லிபுத்தூரார்;

"வேதம் அடியுண்டன விரிந்தபல ஆகம விதங்கள் அடியுண்டன ஓரைம்
பூதம்அடி உண்டன விநாழிகை முதற்புகல் செய் பொருளோடு சலிப்பில் பொருளின்
பேதம் அடியுண்டன பிறப்பிலி இறப்பிலி பிறங்கல்அர சன்றன் மகளார் நாதன்
அமலன் சமரவேட வடிவங்கொடு நரன்கைஅடி உண்ட பொழுதே

விண்ணில் உறை வானவரில் யாரடி படாதவர் விரிஞ்சன் முதலோர் உததிசூழ்
மண்ணில்உறை வானவரில் யாரடி படாதவர் மனுக்கள்முத லோர்கள் அதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள் கட்செவி மகீபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாவடி படாதன இருந்துழி இருந்துழியரோ"

என்று பாடியுள்ளார். இதனால் இவ்வுலகம் இறைவனை முதலாகக் கொண்டிருக்கிறதென்பதும் இறைவன் மாட்டு நிகழ்பவை எல்லா உயிர்கள் மாட்டும் நிகழுமென்பதும் நன்கு பெறப்படலாயின.

(இறைவன் முழுமுதல் தன்மை]

(வில்லிபாரதம்)



191. எல்லா உயிர்களையும் நல்லுலகில் ஏற்றிய கதை

இராமபிரான் தம்முடைய வாணாள் இறுதியில் இவ்வுலகத்தை விட்டுச் செல்லத்தொடங்கினார். அப்பொழுது அயோத்தியா நகரத்தில் இருந்த உயிர்களெல்லாம் இராம பிரானையடைந்து, "தேவரீர் எங்குச் சென்றாலும் அடியேங்களையும் உடனழைத்துக்கொண்டு செல்ல வேண்டும்" என்று வேண்டிக்கொண்டன. இராமபிரான் அவ்வுயிர்களின் அன்புடைமையைக் கண்டு, "அப்படியே ஆகட்டும் " என்று திருவருள் செய்தார். அனைவருந் தம்மைத் தொடர்ந்து வருமாறு கட்டளையிட்டுத் தாம் புறப்பட்டார். அப்பொழுது

அந்நகரத்தில் இருந்த மனிதர்களேயல்லாமல் விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்களும் அகமகிழ்ந்து இராமபிரான் பின் சென்றன. இராமபிரான் சரயூ 'ஆற்றில் இறங்கிப் பரம் பதற்திற்கு எழுந்தருளும்போது, தம்மிடத்திலே அன்பு கொண்டு பின்தொடர்ந்து சரயூ ஆற்றிலே மூழ்கி உடம்பை துறந்த எல்லா உயிர்களும் பரமபதத்தைப்போல் சிறந்த உலகத்தை அடைந்து இன்புறுமாறு செய்தார்.

(இராமாயணம்

(மெய்யன்பு)



192. எல்லாந் தெய்வச்செயலான கதை

ஒரு நாட்டில் ஓர் ஆலமரத்தில் ஆணும் பெண்ணுமான இரண்டு புறாக்கள் அமர்ந்திருந்தன. அப்பொழுது ஒரு பெரிய இராசாளியானது இப்புறாக்கள் பறக்கத்தொடங்கியவுடன் அடித்துக்கொண்டு போய்விட வேண்டும் என்னும் நோக்கத்தோடு மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அதனைப் பார்த்த புறா கீழே வேறுபக்கமாகப் பறந்துபோய்விடலாமென்று பார்த்தது. கீழே வேடன் ஒருவன் புதரில் மறைந்து அப்புறாக்கள் இரண்டையும் ஓரம்பினால் அடித்து

வீழ்த்த குறிபார்த்து நகர்ந்துகொண்டேயிருந்தான். இதனை கண்ட ஆண் புறா பெண் புறாவிடம் தமக்கு நேர்ந்துள்ளதை கூறிக் கலங்கியது. இத்தொல்லையில் இருந்து கடவுள் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். நம்மால் ஆவப்போவ தொன்றுமில்லை. எல்லாந் தெய்வச் செயலே என்று கூறி கலக்கமடைந்திருந்தது. குறிபார்த்து நகர்ந்து கொண்டேயிருந்த வேடன் ஒரு பாம்புப் புற்றிடமாக நகர்ந்துபோய்விட்டான். புற்றில் இருந்த பாம்பு வெளிப்பட்டு வேடனை கடித்துவிட்டது. அவன் "ஆ" என்று அலறிக் கொண்டு கீழே சாய்ந்தான். அவன் கையில் இருந்த கணைவிடுபட்டு இராசாளியைப் போய்த் தாக்கியது. அதனால் இராசாளியும் குற்றுயிராய்க் கீழே விழுந்தது. பாம்பினது நஞ்சு தலை கேறியபடியினால் வேடன் இறந்தொழிந்தான். தெய்வத்தை நம்பிய புறாக்கள் இரண்டும் எல்லாந் தெய்வச் செயலே என்று தேறிப் பறந்து போயின.

"கரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும் இராசாளி கருத்தும் கண்டே
உறைந்து சிறு கானகத்தில் உயிர்ப்புறா பேடுதனக் குரைக்குங் காலை
விரைந்துவிடம் தீண்டவுயிர் விடும் வேடன் லூறும் வீழ்ந்த(து) கணையால்வல்
அரன்செயலே ஆவதல்லால் தன்செயலால் அறிவுள்ளோரே"

ஆவதுண்டோ எல்லாந் தெய்வச்செயல்]

(விவேக சிந்தாமணி)



193. எல்லாம்வல்ல சித்தர் கதை

ஒரு காலத்திலே சோமசுந்தரக் கடவுள் அபிடேகபாண்டியனுக்கும் மற்றவர்களுக்கும் அருள் செய்ய எண்ணினார். ஒரு சித்தரைப்போல் வடிவங்கொண்டார். சித்தர்கட்கு அமைய வேண்டிய உறுப்புகளெல்லாம்

அவருக்கு நன்கு அமைந்திருந்தன. அவர் மதுரையின் பலவிடங்களினுஞ் சுற்றித் திரிந்தார். தொலைவில் உள்ள மலையை அண்மையில் அழைப்பார். அண்மையில் உள்ள மலையைத் தொலைவிலே போக்குவார். இளையோரை முதியோராகச் செய்வார். முதியோரை இளையோராகச் செய்வார். ஆணைப் பெண்ணாக்குவார். பெண்ணை ஆணாக்குவார். கூன், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலியவைகளைத் தீர்ப்பார். வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பவைகளைப் பொன்னாக்குவாரர். செல்வர் வீட்டுப் பொருளை வறியவர்கள் வீட்டில் செலுத்து வார். பகைவர்களை நண்பர்களாக்குவார்; நண்பர்களைப் பகைவர்களாக்குவார். எட்டிமரத்திலே நல்ல கனிகள் பழுக்கச் செய்வார். கோலை விண்ணிலே எறிந்து அதன்மேல் ஊசியை நாட்டி, அதன்மேற் காற்பெருவிரலை ஊன்றி ஆடு வார். அவ்வூசிமேலே தலையும் விண்ணிலே திருவடிகளுமாகச் சுழலுவார். கருடனைப்போல் விண்ணிலே பறந்து முகில்களைப் பிடித்துப் பிழிவார். இவ்வாறு பலவகையான புதுமைகளைச் செய்துகொண்டு திரிந்தபடியால் இவருக்கு எல்லாம்வல்ல சித்தர் என்று பெயர் உண்டாகியது.

(எல்லாம்வல்ல சித்தர்)

(திருவிளையாடல்)



194. ஏழுகடல் அழைத்த கதை

மதுரை மாநகரில் இறைவன் சௌந்தரபாண்டியன் என்னும் பெயரோடு அரசாட்சியை நடத்திக்கொண்டிருந்தார். ஒருநாள் கௌதம முனிவர் அப்பெருமானைக் கண்டுவிட்டுத் திரும்பும்பொழுது காஞ்சனமாலையிடஞ் சென்றார். காஞ்சன மாலை கௌதமரைப் பார்த்து, "நல்வினையின் பொருட்டுச் செய்யத்தக்க உயரிய தவம் யாது?" என்று உசாவினாள். அதற்கு அம்முனிவர், "கங்கை முதலிய ஆறுகளிலே நீராடு தல் நல்வினையை மிகுவிப்பதாம். உலகிலுள்ள யாறுகள் பலவற்றுக்குந் தனித்தனியே போய் நீராடுதல் அருமையான செயலாகும். ஆறுகளெல்லாங் கடலிலே வந்து நிறைகின்றன. ஆகவே கடலில் நீராடுதல் மிகச் சிறந்தது" என்று கூறினார்.

கடலில் நீராட விரும்பிய காஞ்சனமாலை தன் மகளாகிய தடாதகைக்கு அச்செய்தியைத் தெரியப்படுத்தினாள். தடாகை தாயின் விருப்பத்தைத் தடாதவளாய் அச்செய்தியைத் தன்னுடைய கணவராகிய சௌந்தரபாண்டியருக்குத் தெரியப்படுத்தினாள். சௌந்தரபாண்டியர் "ஒரு கடலை மட்டு மன்று ஏழு கடல்களையும் இவ்விடத்திற்கு வருமாறு செய்கிறேன்" என்று கூறி ஏழுகடல்களும் கிழக்குத் திக்கில் உள்ள ஒரு குளத்தினிடத்திலே ஏழு நிறங்களோடு வந்திருக்குமாறு செய்தார்.

"மாமிக்குக்கடலேழும் வழங்கினீர்"

[திருவிளையாடல்]

(மதுரைக் கலம்பகம்)



195. எறிபத்த நாயனார் கதை

ஏறிபத்தர் என்பவர் கரூரில் வாழ்ந்திருந்தார். இவர் மிகுந்த சிவபக்தியுடையவர். சிவனடியார்களுக்கு ஏதேனுந் தொல்லை நேர்ந்தால் இவர் விரைந்து போய் அதனை நீக்குவார். அத்தொல்லையுண்டு செய்தவர்களையுங் கொலைசெய்து விடுவார். சிவகாமியாண்டார் என்பவர் வழக்கம்போல மலர்கள் பறித்துக்கொண்டு தெருவழியே சென்றார். அந்நாட்டையாளும் சோழநாயனாரது பட்டத்துயானை அப்பொழுது' அவ்வழியே வந்தது. அது மதவெறிகொண்டு முழங்கியது சிவகாமியாண்டாருடைய கையில் இருந்த பூக்குடலையைப் பறித்துச் சிதறியது. இதனைக் கண்ட எறிபத்தர் மிகுந்த சினங் கொண்டார். அந்த யானையையும் பாகர்களையுங் கொன்று வீழ்த்தினார்.

எறிபத்தருடைய அன்பின் திறத்தைக் கண்ட புகழ்ச் சோழர், சிவனடியாருக்குத் தீங்கு செய்த யானையை வளர்த்த என்னைக் கொல்லவேண்டியது கட்டாயம் என்று தன்கையில் இருந்த வாளை அவருடைய கையிலே கொடுத்தார். இத்தகைய மெய்த் தொண்டருக்குத் தீங்கிழைத்தோமே என்று வருந்திய எறிபத்தர் அவ்வாளால் தம்முடைய கழுத்தை அரிந்துகொள்ளத் தொடங்கினார். புகழ்ச் சோழ நாயனார் அஞ்சி நடுங்கிக் கையையும் வாளையும் பிடித்துக்கொண்டார். அவர்களுடைய மெய்யன்புக்கு மகிழ்ந்த இறைவன் இறந்து

போன யானையும் பாகர்களும் உயிர்பெற்றெழுமாறு திருவருள் புரிந்தார். எறிபத்தருக்கும் புகழ்ச்சோழருக்கும் இறுதியில் வீடுபேறுங் கிடைத்தது.

[சிவப்பணி]

(பெரிய புராணம்)



196. ஏகம்பவாணன் கதை

குலோத்துங்க சோழன் காலத்திலே ஆற்றூரிலே வாண பூபதி முதலியார் என்னும் பெயருடைய வேளாண்குடிச் செல்வன் ஒருவன் இருந்தான்.
அச்செல்வனுக்கு ஒரு குழந்தை பிறந்தது.
அது பிறந்தவுடனே தாய் இறந்துபோக
நேரிட்டது. பிறந்து இரண்டொரு திங்களேயான தன்னுடைய குழந்தையையும் பொருளையுஞ் செல்வன் பண்ணையாளாகிய ஏகன்சாம்பான் இடத்திலே ஒப்புவித்துச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டு இறந்துபோனான். பண்ணையாள் அக்குழந்தையை நன்கு வளர்த்துக் கம்பரைக் கொண்டு கல்வியையும் நன்கு கற்பிக்கச் செய்தான். அப் பிள்ளை பெரியவனான பிறகு வளர்ப்புத் தந்தையாகிய ஏகன் பெயர், கல்வி கற்பித்த கம்பர் பெயர், தந்தையின் பெயர் மூன்றையும் ஒன்றாகச்சேர்த்து ஏகம்பவாணன் என்று பெயர் வைத்துக்கொண்டான். ஏகம்பவாணனுக்கு ஏகன் திருமணமுஞ் செய்துவைத்தான். மனைவியும் கல்வியை நன்கு கற்றுப் புலமையடைந்தவளாய்த் திகழ்ந்தாள். ஏகம்ப வாணன் தன்னையிகழந்த மூவேந்தரையும் தன்னுடைய பூதத்தால் சிறைசெய்து அவர்களுடைய செருக்கையும் அகற்றினான்.

[அரசர்களையும் அடக்குந்திறம்] (ஏகம்பவாணன் வரலாறு)



197. ஏகம்பவாணன் மனைவி கதை

ஏகம்பவாணன் வீட்டிற்கு ஒரு நாள் சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் சேரவந்தார்கள். அவர்கள் வந்தபொழுது ஏகம்பவாணன் வயலுக்குச் சென்றிருந்தான். மூவேந்தரும், "முதலியார் எங்கே?" என்று வீட்டில் உசாவினார்கள். "முதலியார் வயலுக்குப் போயிருக்கிறார்" என்று முதலியாருடைய மனைவி ஏவலன் ஒருவனைக்கொண்டு இயம்பச் செய்தாள். தாங்கள் வந்தபொழுது வீட்டிலிருந்து வரவேற்கவில்லையே என்னுங் குறை அவர்களுக்கு இருந்தது. "முதலியார் வயலுக்கு முடி நடப்போயினாரோ?" என்று ஏளனமாகக் கூறினார்கள்.இம்மொழி முதலியார் மனைவியின் காதில் விழுந்தது. அவள் சினங்கொண்டாள்.

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி ஆனை மிதித்த அருஞ்சேற்றில் - மானபரன் பாவேந்தர் வேந்தனாம் வாணன் பறித்துநட்டான் மூவேந்தர் தங்கள் முடி,

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினாள். இச்செய்தியைக் கணவனிடஞ் சொன்னாள். இதனால் மூவேந்தருக்கும் பல தொல்லைகள் உண்டாயின. யாவரேயாயினும் வாயை அடக்கிப் பேசார்களாயின் தீமை நேர்வது திண்ணம்.

(ஏகம்பவாணன் வரலாறு)

நாவடக்கம்



198. ஏகலைவன் கதை

ஏகலைவன் என்பவன் பாண்டவர்கள் அத்தினபுரியை அரசாட்சி செய்திருந்த காலத்தில் அத்தினபுரிக்கு அண்மையில் இருந்த சிற்றூர் ஒன்றில் வாழ்ந்திருந்தான். இவன் வேடர் குலத்திற் பிறந்தவன். அந்நாளில் அத்தினபுரத்தில் துரோணர் அரசிளங்குமரர்கட்கு வில்வித்தை கற்பித்துக் கொண்டிருந்தார். ஏகலைவன் துரோணரிடம் வந்து தனக்கும் வில்வித்தை கற்றுக்கொடுக்கும்படி வேண்டினான். துரோணர் அரசிளங்குமரர்களைத் தவிரப் பிறருக்குத் தாம் வில்வித்தை கற்றுக்கொடுப்பதில்லை என்று கூறிவிட்டார்.

ஏகலைவன் துரோணர் மறுத்துவிட்டதால் மனங்கவல வில்லை. துரோணரைப் போல் உருவம் ஒன்று அமைத்து அதன் முன்னிருந்து வில்வித்தையைத் தனக்குத்தானே பழகிக்கொண்டு துரோணரை ஆசிரியராக உள்ளத்தில் எண்ணிக்கொண்டான். அவன் உண்மையான அன்புடன் அவ்வாறு பழகியதால் வில்வித்தைகள் ஏகலைவனுக்கு நன்கு உண்டாயின.

ஏகலைவன் வில்வித்தையில் வல்லான் என்பதை அருச்சுனன் உணர்ந்தான். செய்தியை அறிந்தான். ஏகலைவனுடைய வலது கைப்பெருவிரலைக் குரு காணிக்கையாகப் பெறுமாறு துரோணருக்குச் சொன்னான். அவரும் அவ்வாறே தருமாறு கேட்டார்.

ஏகலைவன் தனக்குத்தானே வில்வித்தையைப் பழகி, துரோணரை ஆசிரியராக உள்ளத்தில் எண்ணிய சிறு உதவிக்காக விரலையும் அறுத்துக்கொடுத்துவிட்டான். நல்லவர்கள் பிறர் செய்த தினைத்துணை நன்றியைக் கூடப் பனையளவாகக்கொண்டு மதிப்பார்கள் என்பது ஏகலைவனிடத்தில் நன்கு விளங்கியது.

(ஆசிரியரிடத்தில் அன்பு)

(பாரதம் )



199. ஏகன் கதை

ஆற்றூரிலே முன்னாளிலே வாணபூபதி என்னும் பெயருடைய முதலியார் ஒருவர் இருந்தார். அவரிடம் ஏகன் என்னும் பெயரையுடைய பண்ணையாள் ஒருவன் இருந்தான். தம்முடைய குழந்தையையும் பெரும் பொருளையும் வாண பூபதி முதலியார் ஏகனிடத்தில் ஒப்புவித்துக் "காப்பாற்ற வேண்டும்" என்று கூறிவிட்டு இறந்துபோனார். ஏகன் அக்குழந்தையை நன்கு பாராட்டி வளர்த்ததுடன் பண்ணையின் வேலைகளையுங் கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வாண பூபதி முதலியாருடைய செல்வத்தைப் பெருக்கினான். குழந்தை தகுந்த அகவையை அடைந்தகாலத்தில் பொருளை ஒப்புவித்ததோடு பூதங்காத்த பொருளை எடுப்பதற்காகத். தானும் கழுத்தையறுத்துக்கொண்டு பூதத்திற்குப் பலியானான். இவனுடைய நல்லியல்பு எல்லோராலும் நன்கு. பாராட்டப் பெற்று இன்றுவரையிற் சிறந்து விளங்குகின்றது..

(உண்மையான பணியாள்)

(ஏகம்பவாணர் வரலாறு).



200. ஏசுவின் கதை

ஏசு என்பவர் கிறித்து சமயத்தை உலகிற் பரப்பியவர். ஐரோப்பாக் கண்டத்தில் கலிலேயா என்னும் நாட்டில் உள்ள நாசரேத்து என்னும் ஊரிலே இவர் பிறந்தார். இவர் பிறந்த நாள் முதற் கொண்டுதான் ஆங்கில ஆண்டு கணக்கிட பெறுகிறது. இவர் ஒரு கன்னிவயிற்றிற் பிறந்தார் என்பர். இவர் நூல்கள் பலகற்று நல்ல அறிவாளியாக விளங்கினார்.

இவர் தாம் ஒரு கொள்கையை மேற்கொண்டு எல்லா விடங்கட்கும் போய் அதனைப் பரப்பினார். அன்பும் அருளும் நல்லொழுக்கமும் இவரிடத்திற் சிறந்து விளங்கின. ஒழுக்கத்தை உயர்ந்ததாக எண்ணி அதனை உயிரைப்போல் போற்றினார். இவருடைய உரைகளை அனைவரும் மறைமொழியாகக் கொண்டு மதித்தனர். இவருடைய சிறப்புயாண்டும் பரவியது. எல்லோரும் இவரைத் தெய்வம் என்று பாராட்டினர்.



இவருடைய பெருமையிற் பலருக்குப் பொறாமை உண்டாயிற்று. ஆகவே இவருக்குத் தீமைகள் பல செய்யத் தொடங்கினர். பலவாறு அல்லல்கள் செய்தனர். இறுதியிற் கொன்றுவிடுவதென்று முடிவு செய்தனர். இவரை வலிந்து பிடித்துப்போய் மரச்சிலுவையொன்றில் வைத்து ஆணிகளை அடித்துக் கொன்றுவிட்டனர். தம்மைக் கொன்ற தீயவர்களிடத்தில்கூட ஏசு தீய உரைகள் எதனையுங் கூறவில்லை. நல்லொழுக்கம் உடையவர்கள் மறந்துங்கூட வாயினால் தீய உரைகளைச் சொல்லமாட்டார்கள் என்பதை அனைவரும் இவரிடம் அறிந்துகொண்டனர்.

[ஒழுக்கமுடையார் தன்மை]

(ஏசு கதை)



201. ஏயர்கோன் கலிக்காமர் கதை

சோழவள நாட்டில் பெருமங்கலம் என்னும் ஊரில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர் வாழ்ந்திருந்தார். இவர் சிறந்த சிவ வழிபாடு உடையவர். சோழ மன்னனுடைய படைத்தலைவராக விளங்கியவர். திருப்புன்கூர்ச்சிவலோக நாதனுக்குத் திருப்பணிகள் பல செய்து கொண்டிருந்தார். சுந்தரர் ஆரூர்த் தியாகரைப் பரவை நாய்ச்சியாரிடம் தூதுனுப்பிய செய்தியை இவர் உணர்ந்தார். சுந்தரர்மீது அளவற்ற சினங்கொண்டவராக இருந்தார். சிவபெருமான் சுந்தரரையுங் கலிக்காமரையும் நண்பர்களாக்க எண்ணினார். கலிக்காம

நாயனாருக்குச் சூலை நோயை ஏவினார். சூலையா வருந்துஞ் சமயத்தில், "இந்நோய் சுந்தரனால் அன்றி வேறு ஒருவராலும் தீரமாட்டாது" என்று கனவில் அறிவித்ததோடு சூலைநோயைப் போக்குமாறு சுந்தரருக்குக் கட்டளையும் இட்டார். சுந்தரர் சூலைநோயைப் போக்கக் கலிக்காமரிடத்திற்குப் புறப்பட்டார்.சுந்தரர் வருவதையுணர்ந்த கலிக்காமர் உடைவாளால் தமது வயிற்றைப் பிளந்து கொண்டு மாண்டார். பிறகு அங்குவந்த சுந்தரர் தாமும் மாளத் தொடங்கினார். இறைவன் அருளால் கலிக்காமர் உயிர்பிழைத்தார். பிறகு கலிக்காமருஞ் சுந்தரரும் நண்பர்களாக விளங்கினர்.

"கோக்கலிக் காமன்வயிற்றிடைக்குத்திக் கொண்டதேதுக்கு நீ புகலாய்?"

(நால்வர் நான்மணி மாலை)

[தொண்டர்கள் பகைமை]

(பெரிய புராணம்)



202. ஏரண்ட முனிவர் கதை

ஏரண்ட முனிவர் சோழவள நாட்டில் கொட்டையூரில் வசித்திருந்தார். ஒரு காலத்தில் காவிரியின் நீர் வலமாகச் சுழித்து நிலத்தின் பிளத்துக்குள் புகுவதாயிற்று. இதனால் நாடு வறுமையை அடைந்துவருந்தியது. சோழ

மன்னன் ஏரண்ட முனிவரைக் கண்டு ஆறு நிலத்துக்குள் புகுஞ் செய்தியைக் கூறி இதற்கு யாது செய்யலாமென்று கேட்டான்.

முனிவர் அரசனைப் பார்த்து, " ஒரு முனிவனாவது அரனாவது அச்சுழலில் வீழ்ந்து இறக்கவேண்டும். அவ்வாறு இறப்பின் சுழல் அடைபட்டு நீர் நிலத்திலே பாயத் தொடங்கும்" என்று கூறினார். அரசன்தானே அச்சுழலில் விழுந்து இறந்து நாட்டு மக்களுக்கு நன்மையுண்டாகச் செய்ய வேண்டுமென்று முடிவுசெய்தான். தன்னுடைய மகனுக்கும் பட்டங்கட்டினான்.



இதனையுணர்ந்த அரசன் மனைவி ஏரண்டமா முனிவரைப் போய்ப்பார்த்துப் பணிந்தாள். அம்முன் வர் அரசன் மனைவியை வாழ்த்தத் தொடங்கி, "நீண்டகாலம் திருமாங்கல்ய மணிந்தவளாய் வாழ்ந்திருக்கக் கடவாய் " என்று வாழ்த்துரை கூறினார்.

இவ்வுரையைக் கேட்ட அரசன் மனைவி அரசனுடைய முடிவை முனிவருக்குக் கூறி அவருடைய வாழ்த்துரை பொய்யாகாமல் காக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். தான் அரசனுக்குக் கூறிய செய்தியை முனிவர் எண்ணிப் பார்த்தார். அரசனிடஞ் சென்று, " நீ நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டியவன். நானோ அத்தகைய கடமைகள் எவையும் இல்லாதவன். நானே அந்நீர்ச் சுழலில் வீழ்ந் திறந்து நீரின் போக்கை அடைப்பேன். நீ என்பொருட்டு நான்கு சிவன் கோயில்கள் கட்டிச் சிவலிங்கம் அமைக்க வேண்டும் " என்று கூறித் தாம் நீரில் வீழ்ந்திறந்து நீர் புலம்புகுதலைத் தடுத்தார். இவர் வேண்டுகோளின் படியே தஞ்சை இராசராசேச்சுரம், கங்கைகொண்ட சோழேச்சுரம் முதலிய திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன.

'ஏரண்ட மாமுனியும் தேக்குநீர் வீழ்ந்திறந்தான்"

(பிறர்க்குதவி)



203. ஏலேலசிங்கர் கதை

இவர் திருவள்ளுவதேவர் காலத்தில் சென்னையில் வாழ்ந்திருந்தார். வாணிகம் இவருடைய தொழிலாக அமைந்திருந்தது. வாணிகத்தில் இவர் அணுவுங்கோணார். பிறர் பொருளையுந் தம்முடைய பொருள்போலவே மதித்து அப் பொருளுக்கு இழப்பு நேராதவகையில் வாணிகம் புரிவார். இவருடைய நேரிய செயலால் பொருள் மிகுதியாகக் குவிந்தது. இவர் அவைகளைப் பொன்னாகமாற்றிக் கடலில் எறிந்த போதுகூட இவர்பொருள் அழிந்தொழியவில்லை. அப்பொருள் ஒரு மீனால் விழுங்கப்பட்டுக் கரைக்கே வந்து சேர்ந்தது. வாணிகஞ் செய்பவர்கள் பிறருடைய பொருளையுந் தம்முடைய பொருள்போல மதித்து வாணிகஞ்செய்தலே சிறந்த வாணிகமாம் என்பது அக்காலத்தில் ஏலேலசிங்கரிடத்தில் இனிது விளங்கியது.

[வாணிகத்திற்கு அழகு)

(திருவள்ளுவர் வரலாறு)



204. ஏறு செற்ற கதை

கண்ணன் நப்பின்னைப் பிராட்டியைத் திருமணஞ் செய்து 'கொள்ள எண்ணினான். நப்பின்னையினுடைய தந்தை அடங்காமல் திரிந்து அல்லல் விளைக்கும் ஏழு ஏறுகளை அடக்கும் ஆண்மையாளனுக்கே தன்னுடைய மகளைத் திருமணஞ் செய்து கொடுப்பதாக முடிவு செய்திருந்தான். இதனையுணர்ந்த கண்ணன் ஏழு திருவுருவங்களை யெடுத்துக் கொண்டுபோய் அவ்வேறுகளைப் பிடித்து வலியடக்கித் தழுவினான்.

"ஏறுங்கரியுஞ் செற்றான் அரங்கன்"

[கண்ணன் ஏறு தழுவியது]

(திருவரங்கத்தந்தாது)




205. ஏனன் கதை

ஏனன் என்பவன் ஏழிற்குன்றம் என்னும் ஊரில் இருந்த ஒரு குறுநில மன்னன். ஏழிற்குன்றம் என்பது மலைநாட்டின் மேற்கெல்லையில் கடற்கரைக்கண் இருந்தது. இந்நாட்டில் மலைவளம் மிகுதியாகையால் ஏனன் செல்வச் சிறப்பிலே சிறந்து விளங்கினான். நாளும் செல்வத்தைப் பெருக்குவதில் தான் உள்ளத்தைச் செலுத்தினானேயல்லாமல் கல்வியிற் சிறிதேனுங் கருத்துச் செலுத்தவில்லை.

கல்வியறிவில்லாமற் போகவே கொடைநலம் முதலிய நற்பண்புகளும் இல்லாமல் உலோப குணத்தை மேற் கொண்டு நின்றான். புலவர்கட்கு யாதும் வழங்கான்; அறமுஞ் செய்யான்; நல்லுரைகளைச் செவியிற் கொண்டால் அல்லவோ நல்லறிவும் நற்பயனும் உண்டாகும்? ஔவையார் இவனுடைய இயல்பையறியாமல் பரிசு நாடிச் சென்றார். இக்கஞ்சனோ கதவையடைத்துத் தாழிட்டுக் கொண்டு உள்ளேயிருந்தான்.

இவன் கல்வி கேள்விகளில் கருத்துச் செலுத்தாத புல்லன் என்பதை ஔவையார் அறிந்தார். வசைபாடிச் சென்றார். அது முதல் இவன் இழிவடைந்தான். "பாட்டும் உரையும் பயிலாத ஓட்டைச் செவியன்" என்று ஔவையார் இழித்துக் கூறியிருந்தாராகையால் இவனுடைய பெயர் ஓட்டைச் செவியன் என்றே வழங்கத் தொடங்கியது. கேள்வியால் நன்கு தொளைக்கப்படாத செவிகள் கேட்குந் தன்மை யுடையனவாயினும் கேளாத செவிட்டுக் காதுகளாகவே கொள்ளப்பெறும் என்பது இவனிடம் நன்கு விளங்கியது.

[கேள்வியால் தொளைக்கப்படாத செவி ]




206. ஐயந்தீர்த்த அணங்கின் கதை

ஓர் அரசனுக்கு ஒரு பெண் இருந்தாள். அரசன் அவளுக்கு எல்லாவகையான கலைகளையும் நன்கு கற்பித்தான். மதன நூலையும் அவள் நன்கு கற்றிருந்தாள். பிறகு அவளுக்குத் திருமணம் நடைபெற்றது. கணவனும் மனைவியும் இன்ப விளையாடல்களில் ஈடுபட்டனர். மங்கை மதன நூற்படி செய்த விளையாடல்களைக் கண்ட கணவனுக்கு மனைவி மீது ஐயம் உண்டாகியது. புதுப்பெண்ணாகிய இவளுக்கு இவைகளெல்லாம் எவ்வாறு தெரிந்தன.இவள் முன்னரே இதனிற் பழகியவள் போலும் என்று ஐயுற்றான். சில நாள் வரையிலும் மனைவியிடஞ் செல்லாமல் புழுங்கிக்கொண்டிருந்தான். இதனை மனைவி அறிந்துகொண்டாள். மாப்பிள்ளை யினுடைய அரண்மனை முகப்பின் சுவரில் முழுக் கர்ப்பமுடைய ஒரு பெண் சிங்கத்தின் படத்தை எழுதச் செய்தாள். அதன்பின்னொரு யானையையும் எழுதச் செய்தாள். அந்தப் பெண் சிங்கத்தினுடைய கருப்பத்தில் பாதிக் குட்டிவயிற்றிலேயும் பாதிக்குட்டி வெளியிலுமாய்ப் பிறக்கிறதுபோலவும் எழுதச் செய்து, வெளியான பாதிக்குட்டி அந்தயானை மத்தகத்திலே பாய்ந்து அடிக்கிறது போலவும் எழுதச் செய்தாள். இதனை மாப்பிள்ளை பார்த்தான். சிங்கத்தின் குட்டி பிறந்தவுடனே பெரிய யானையை அடிப்பது அதனுடைய குல
வழக்கம் என்பதையுணர்ந்த அவன் " இந்த ஓவியத்தை இங்கே எழுதச் செய்தது யார்" என்று உசாவியறிந்தான். தான் கொண்ட ஐயத்தைப் போக்கவே மனையாள் அவ்வாறு எழுதச் செய்தாள் என்று தெளிந்து அவள்மீது கொண்ட ஐயம் நீங்கினான்.

"பிலமுற்ற சிங்கமொரு கன்றீனும் படியெழுதிப் பின்னே செம்பொன்
விலைபெற்ற கரியையரிக்கன்று துள்ளிப் பாய்ந்தகதை மெய்யா மன்றே"

(செயங்கொண்டார் வழக்கம்}

[நல்ல அறிவு]



207. ஐயமேற்கச் சென்று அடிபட்ட கதை

பட்டினத்தடிகளை ஒருநாள் இரவு பசிநோய் வருத்தியது. ஓர் இல்லத்தின் முன் சென்று நின்று கையைத் தட்டினார். அவ்வில்லத்துக்குரியவன் அறிவற்ற பேதை. அவன் அடிகள் வேறு நோக்கத்தோடு அங்கே வந்து கையைத் தட்டுவதாக எண்ணினான். உசாவித் தெரிந்து கொள்ளவும் அவன் முயலவில்லை. தடியொன்றையெடுத்துச் கொண்டு நன்கு புடைத்துவிட்டனன். பக்கத்து இல்லத தான் பதை பதைத்து ஓடிவந்து அப்பேதையை விலக்கினான். தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துக்கொண்டு போய் உணவிட்டான். அடியினால் துன்புற்ற அடிகள்;

" இருக்கும் இடந்தேடி என்பசிக்கே அன்னம் உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் - பெருக்க அழைத்தாலும் போகேன் அரனேஎன் தேகம் இளைத்தாலும் போகேன் இனி”

என்று பாடிக்கொண்டு சென்றுவிட்டார். வினைப்பயனை ஒவ்வொருவரும் நுகர்ந்தே தொலைக்கவேண்டும்.

(பட்டினத்தடிகள்)

வினைப்பயன்



208. ஐயாறதனிற் சைவனான கதை

சோழவள நாட்டிலே திருவையாற்றிலே ஐயாறப்பருக்குப் பூசை புரியும் ஆதிசைவ அந்தணர்கள் இருபத்து நான்கு பேர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் தம்முடைய மனைவியையும் பிள்ளையையும் விட்டு விட்டுக் கங்கையாடுதற் பொருட்டுக் காசிக்குச் சென்றார். சென்றவர் நெடுநாளாகியுந் திரும்பிவரவில்லை. எஞ்சிய இருபத்து மூன்று ஆதி சைவர்களும் காசிக்குச்

சென்றவருக்குரிய காணி முதலியவைகளைத் தாம் பங்கிட்டுக் கொண்டார்கள். இதனைக் கண்டு வருந்திய தாயும் மகனும் ஐயாறப்பரிடம் முறையிட்டுக் கொண்டனர். ஐயாறப்பர் காசிக்குச் சென்ற அந்தணரைப்போல் வடிவங்கொண்டு எழுந்தருளினார். காசிக்குச் சென்ற ஆதிசைவ அந்தணர் மீண்டு வந்ததைக் கண்டதும் ஏனைய இருபத்து மூவரும் அவரிடம் இருந்து கவர்ந்து கொண்டவைகளைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். வந்தவர் ஐயாறப்பருக்குக் கங்கைநீரால் திருமுழுக்குச் செய்து பூசனைபுரிந்து தம்முடைய இல்லத்திலே தங்கியிருந்தார் முழுவதும் அவரையே ஒத்த மற்றொருவர் காசிக் கங்கையோடு வந்து சேர்ந்தார். எல்லோரும் ஈதென்ன புதுமை யென்று மிகுந்த வியப்படைந்தார்கள். முன்வந்த ஆதிசைவ அந்தணர்க்கும் பின்வந்த ஆதிசைவ அந்தணர்க்குஞ் சொற்போர் மூண்டது. இருவருந் தத்தமக்குரிய முறியோலைகளைக் காட்டினர். இரண்டு ஓலைகளும் பெரும்பாலும் ஒத்திருந்தன. ஆயினும் சிற்சில மாறுபாடுகளால் மெய்யான முறியைப் பொய்யென்றும் பொய்யான முறியை மெய்யென்றும் எல்லாரும் ஒரேமனதாகக் கூறினார்கள். முதலில் வந்த சைவர் தாம் காட்டிய முறியே மெய்ம்மையான தென்பதைத் தெளிவித்து: உடனே மறைந்தருளினார்.

"ஐயாறதனிற் சைவனாகியும்"

(இறைவனருள்)

(திருவாசகம்)

(திருவையாற்றுப்புராணம்).




209. ஒட்டக் கூத்தர் கதை

ஒட்டக் கூத்தர் என்பவர் கம்பர் காலத்தில் வாழ்ந் திருந்த சிறந்த தமிழறிஞர். இவர் கலைமகளுடைய அருளையும் ஓரளவு பெற்றிருந்தார். இவர் புலவர்கள் என்று தம் மைக் கூறிக்கொள்பவர்களையழைத்துச் சொற்போரிடுவார். தோற்றுப்போனவர்களைச் சிறையில் அடைத்து வைப்பார். கலைமகள் விழாக்காலத்தில் சிறைக்கூடத்தில் இருப்பவர்களையெல்லாம் வெளிப்படுத்தி இருவர் இருவராகக் குடுமிகளைச் சேர்த்து முடியச் செய்து தேவிக்கு முன்கொண்டுபோய் வெட்டிவிடச் செய்வார். இவ்வாறு வெட்டுவதைச் சோழ மன்னனும் தடை செய்யவில்லை. பிறகு இவருடைய இப் பழக்கம் புகழேந்திப் புலவரால் நின்றது.

"இரண்டொன்றாய் முடிந்து தலை இறங்கப்போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை ”

[ஒட்டக்கூத்தர் கதை]

(தனிப்பாடல்)



210. ஒன்னன் கதை

முன்னாளில் ஒன்னன் என்னும் பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பெருஞ் செல்வம் அமைந்திருந்ததோடு உயரிய குணங்களும் பொருந்தியிருந்தன. ஆனால் அவனுக்கு மனைவியாக அமைந்தவள் மிகக் கொடியவள். ஊரார்கள் அவளைத் தாடகை என்றே உரைப்பார்கள். ஒன்னன்

அவளுடைய கட்டளைக்கு அடங்கிப் பெட்டிப்பாம்பாக ஒழுகினான். அவள் 'நில்' என்றால் நிற்பான். "உட்கார்" என்றால் உட்காருவான். ஒருநாள் மாலை நேரத்தில் ஒன்னன் புலவர் ஒருவரைத் தெருவிற் கண்டான். தன்னுடைய இல்லத்திற்கு வருமாறு அவரை அழைத்துக் கொண்டு சென்றான்.



அவரைத் திண்ணையில் அமரச் செய்து விட்டுத் தான் மட்டும் உள்ளே சென்றான். " புலவர் ஒருவர் வந்துள்ளார் உணவிட வேண்டும்" என்று பணிவாகக் கூறினான். அவள் முதலில் சீறினாள். தாறுமாறாகப் பல பழிப்புரைகளைக் கூறினாள்; பிறகு ஒருவாறு உள்ளம்மாறினாள். "இலை இல்லை வந்திருப்பவரைப் போய் வாங்கிவரச் சொல்" என்று சொன்னாள். ஒன்னன், வந்திருக்கும் புலவரை இலை வாங்குவதற்குப் போகச் சொல்லவில்லை. தானே வாங்கி வருவதற்கு ஓடினான்.

புலவர் திண்ணையில் அமர்ந்திருந்தார். விளக்கில்லாத படியால் இருளாக இருந்தது. ஒன்னன் மனைவி வெளியே வந்தாள். இருளில் அமர்ந்திருப்பது தன்னுடைய கணவன் என்றே எண்ணினாள். இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும் பலமாகப் பற்றித் திருகிக்கொண்டே "இனிமேல் தெருவிற்

போகிறவனையெல்லாம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வராதே" என்றாள். புலவருடைய காது அன்று அவ்வரக்கியின் கையோடு போகாமற் போனது புலவர் செய்த நல்வினைதான். யாதும் மறுமொழி பேசாமல் வலியைப் பொறுத்துக்கொண்டிருந்த புலவர் அவள் உள்ளே சென்றதும். ''பிழைத்தேன் பிழைத்தேன்" என்று எண்ணிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போனார்.


இலை வாங்கிக்கொண்டு வந்த ஒன்னன் புலவரைக் காணாமல் மனைவியைப் பார்த்துப் "புலவர் திண்ணையில் இருந்தாரே எங்கே?" என்று கேட்டான். அப்பொழுது தான் அவளுக்குத் திண்ணையில் இருந்தது புலவராக இருக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆயினும் அவள் அதை பொருட்படுத்தவில்லை. " அவர் பசியாக இருக்கிறதென்று கூறிச் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்'' என்று ஒரு பொய் சொன்னாள். பிறகு ஒரு காலத்தில் அப்புலவரைப் பார்த்தபொழுதுதான் ஒன்னனுக்கு உண்மை விளங்கியது. அவன் தன்னுடைய இல்லத்தைப் புலியிருக்கும் புதராக எண்ணிக்கொண்டான். இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும் என்பது இவனிடத்தில் பொருந்தியது.

(பொல்லா மனைவி புலிக்கு நிகர்)



211. ஓடம் ஆளில்லாமல் ஓடிய கதை


திருஞானசம்பந்தப் பிள்ளையார் பல சிவப்பதிகளிலும் இறைவழிபாடு செய்துகொண்டு திருக்கொள்ளம் பூதூரை நெருங்கினார். அடியார்களும் சம்பந்தரும் நீர் பெருகியோடும் ஓர் ஆற்றுக்கு இக்கரையில் இருந்தனர். திருக்கோயிலும் ஊரும் அக்கரையில் இருந்தன. ஆற்றிற்குப் பாலம் இல்லை. ஓடம் ஏறி ஆற்றைக் கடக்கவேண்டும். நீர்ப்பெருக்கு மிகுதியாக இருத்தலைக் கண்ட ஓடக்காரன் ஓடத்தை ஓரிடத்தில் கட்டிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்விட்டான். சம்பந்தர் கட்டியிருந்த ஓடத்தை அவிழ்த்துவிட்டார். அடியார்களை அதில் ஏறச் சொன்னார். தாமும் ஏறிக்கொண்டு தேவாரம் பாடினார். ஓடஞ் செலுத்துவாரில்லாமல் அக்கரையை அடைந்தது. அடியார்களுஞ் சம்பந்தரும் ஓடம்விட்டிறங்கித் திருக்கோவிலுக்குச் சென்றனர். அப்பொழுது சம்பந்தர்பாடிய தேவாரம், 'கொட்டமேகமழும்” என்னுந் தலைப்புள்ளது.
[வியத்தகு செயல்] (பெரிய புராணம் )



212. ஓதுவித்த கூலி கொடுத்த கதை

கண்ணன் சாந்தீபினி என்னும் பெயருடைய அந்தணரிடம் எல்லா நூல்களையும் ஓதியுணர்ந்தான். பிறகு ஆசிரியருக்கு ஓதுவித்த கூலியைக் கொடுக்க உள்ளங் கொண்டான். கண்ணனுடைய தெய்வத் தன்மையை அந்த முனிவர் அறிந்தவராகையால் கண்ணனைப் பார்த்து, "பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு பிரசாச தீர்த்தக் கட்டத்தில் கடலில் மூழ்கி இறந்துபோன என்னுடைய மகனைக் கொண்டு வந்து தரவேண்டும் " என்று சொன்னார். அப்பிள்ளை சங்குவடிவ முடைய ஓர் அசுரனால் கடலில் விழுங்கப்பட்டான். கண்ணபிரான் " அப்படியே கொண்டுவந்து தருகிறேன்" என்று கூறிக் கடலில் சென்று அவ்வசுரனைக் கொன்றான். பிறகு எமபட்டணஞ் சென்று அங்கிருந்த பிள்ளையைக் கொண்டு வந்து அந்தணனிடங் கொடுத்தருளினான்.

[செயற்கருஞ்செயல்]



213. ஓரி கதை

ஓரி என்பவன் கொடை வள்ளல்களில் ஒருவன். இவன் குறுநில மன்னனாக இருந்தும் தன்னுடைய ஊக்கத்தாலும் உழைப்பாலும் பெரும் பொருள் திரட்டினான். திரட்டிய பொருளை யாது செய்வதென்று இவன் எண்ணமிடவில்லை. இவனுடைய உள்ளத்தில் வள்ளல் தன்மை மிகுதியாக இருந்தது. தன்னை நாடிவந்த இரவலர்கட்கு அவர்கள் விரும்பியவாறே பெரும் பொருளை நாளும் வழங்கினான். இதன் பிறகு இவனுக்கு 'வள்ளல்' என்னும் பெயருண்டாகி இன்று வரையில் நிலைபெற்றிருக்கிறது. எத்தனையோ மன்னர்கள் பெரும் பொருள் பெற்றிருந்தும் அதனைப் பிறருக்கீந்து வள்ளல்கள் என்னும் பெயரைப் பெறவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு மனமில்லாததுதான். நன்மனம் இல்லாதவர்கள் வள்ளல்தன்மையுடையோம் நாம்; என்னும் பெருமையை அடைய மாட்டார்கள். நன்மனம் உடையவர்கள்தாம் வள்ளல் என்னும் சிறப்பினையடைவார்கள் என்பதை ஓரி உலகிற் குணர்த்தினான்.

(சங்கநூல்)

(வள்ளலாக உள்ளம் வேண்டும்]



214. ஔவையார் ஏமாந்த கதை

ஔவையார் ஒரு நாள் வழிப்பயணஞ் சென்றுகொண் டிருந்தார். முருகக்கடவுள் ஔவையாரோடு சிறிது விளையாட எண்ணினார். ஔவையார் செல்லும் வழியில் நிறை mயப் பழுத்திருந்த நாவல் மரம் ஒன்றில் மாட்டுக்காரப் பையனைப்போல் கோலங்கொண்டு ஏறி நாவற் பழம் பறித்துத் தின்பவரைப்போல் நடித்துக்கொண்டிருந்தார்.

அவ்விடத்தை ஔவையார் அடைந்தார். மரத்தடியிற் சிறிது களைப்பாறலாம் என்று அமர்ந்தார்; மரத்தின் மேல் இருக்கும் பையனைப் பார்த்துத், "தம்பி! நாவற் பழங்கள் சில போடு" என்றார்.முருகக் கடவுள் ஔவையாரைப் பார்த்துப், ''பாட்டி! சுடுகிற பழங்கள் போடவா ? சுடாத பழங்கள்
'போடவா?" என்று கேட்டார். இதனைச் செவியுற்ற ஔவையார், "நாவற்பழங்கள் எங்கேனுஞ் சுடுமா? என்று எண்ணியவராய்ப் பையனைப் பார்த்து, "அடே மூடா! எங்கேனும் நாவற்பழங்கள் சுடுமா? என்னிடம் விளையாட்டா செய்கிறாய்?" என்று கேட்டார்.

முருகர், 'பாட்டி! சினமடையாதே நான் கூறியதைப் பொறுத்துக்கொள்" என்று கூறினார். நன்கு கனிந்த சில பழங்களைப் பறித்துப் போட்டார். அக்கனிகள் கனிந்தவைகளாதலின் அவற்றில் மண் ஒட்டிக்கொண்டன. கனியைக் கையிலெடுத்த ஔவையார் மணலைப்போக்குமாறு வாயால் ஊதினார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த முருகர்,"என்ன பாட்டி! நாவற் பழங்கள்

சுடுகின்றனவோ?" என்று கேட்டார்.இதனைக் கேட்டவுடன் ஔவையாருக்கு மிகுந்த நாணம் உண்டாகிவிட்டது. நாம் இச்சிறுவனிடத்தில் ஏமாந்தோமே என்று எண்ணியவராய்;

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாரி இருங்கதலித் தண்டுக்கு நாணும்-
பெருங்கானில் காரெருமை மேய்க்கின்ற காளைக்கேநான் தோற்றேன் ஈரிரவு
துஞ்சாதென் கண்"

என்று பாடினார்.

(ஔவையார் வரலாறு)

(உருவுகண்டெள்ளாமை]



215. ஔவையார் கயிலாயஞ் சென்ற கதை

சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கயிலைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் தங்களோடு வருமாறு ஔவையாரையும் அழைத்தார்கள். ஔவையார் அச்சமயத்தில் ஆனைமுகக் கடவுளைப் பூசனைபுரிந்து கொண்டிருந்தார். அவர்களோடு கயிலாயஞ் செல்லுவதற்காகப் பூசையை விரைவாகச் செய்தார். ஔவையார் விரைவாகப் பூசையை செய்தலைக் கண்ட ஆனைமுகக் கடவுள் ஔவையைப் பார்த்து, "ஔவையே! நீ பரபரப்படைய வேண்டாம். வழக்கம்போலவே பூசை செய். உன்னை நான் அவர்கட்கு முன்பாகவே திருக்கைலையிற் சேர்க்கிறேன்" என்று கூறினார். இதனைக் கேட்ட ஔவையார் வழக்கம் போலவே பூசை செய்துமுடித்தார். விநாயகர் தம்முடைய துதிக்கையால் ஔவையாரைத் தூக்கித் திருக்கைலையில் வைத்துவிட்டார். முன்னே புறப்பட்டுப் பின்னே போய்ச் சேர்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும், கைலையில் ஔவையைக் கண்டு மிகுந்த வியப்பையடைந்தார்கள். அப்பொழுது ஔவையார்: "மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை முதிரநினைய வல்லார்க் கரிதோ முகில்போல்முழங்கி அதிரவருகின்ற யானையுந்தேரும் அதன்பின்வரும் குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குலமன்னனே" என்னுஞ் செய்யுளைப் பாடினார்.

(கைலைக்குச் சென்றது]

(ஔவையார் வரலாறு)



216. ஔவையார் கதை (1)

ஔவையாரைப்பற்றி அனைவரும் நன்கு உணர்வர். புகழ் மிகுந்த இவர் மிகச் சுருக்கமாகச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர். செய்யுள் சுருக்கமாக இருப்பினும் பொருள் பெருக்கமாக இருக்கும். சிலர் இவரிடம் வந்து "திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் மூன்றையும் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறட்பாக்களில் கூறிவிட்டாரே, அவர் மிகவுங் கெட்டிக்காரரர் அன்றோ?" என்று புகழ்ந்து கூறினார்கள்.

இதனைக் கேட்ட ஔவையார், "அறம், பொருள், இன்பம் மூன்றையுங் கூறுவதற்கு இவ்வளவு பாடல்கள் வேண் டுமா? அவர் கூறாத வீட்டையுஞ் சேர்த்து நான் ஒரு பாட்டில் கூறுகிறேன் பாருங்கள்" என்று கூறி, "ஈதல் அறம், தீவினைவிட் டீட்டல் பொருள், எஞ்ஞான்றும், காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம், பரனை நினைந்து, இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்று கூறினார். இத னைக் கேட்டோர் ஔவையாரின் சுருங்கச்சொல்லுந்திறத்தை
மிக வியந்து பாராட்டினர். தாம்கூற எண்ணியதைச் சில சொற்களாலே கூறுவதற்கு உணராதவர்கள் தாம், பல சொற்களாலே சொல்லுதற்கு விரும்புவர் என்பது ஔவையாரிடம் நன்கு பெறப்பட்டது.

{சுருங்கச் சொல்லுதல்]

(ஔவையார் வரலாறு]



217. ஔவையார் கதை (2)

ஔவையார் மிகுந்த புகழோடு நாடெங்கும் உலவிச் கொண்டிருந்தார். அக்காலத்தில் சோழவளநாட்டில் சிலம்பி என்னும் பெயருடைய விலைமகள் ஒருத்தி இருந்தாள். அவள் கம்பருடைய வாக்கால் பாடப்பெற்றால் மிகுந்த செல்வம் உண்டாகும் என்று எண்ணினாள். கம்பரைக்கண்டு தன்னுடைய கருத்தை வெளியிட்டாள். கம்பர் மிகுந்த பொருள் கொடுத்தால் பாடுவதாகக் கூறினார். சிலம்பி தன்னுடைய உடமைகளை யெல்லாம் விற்றுப் பெரும்பொருளை அவரிடம் தந்தாள். அவர் அதனைப் பெற்றுக்கொண்டு;

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவ துஞ்சோழ மண்டலமே-

என்று அரைப்பாடல் பாடிவிட்டு, "இன்னும் இவ்வளவை பொருள் தருவையாகில் எஞ்சிய பாடலையும் முடிப்பேன்' என்று இயம்பிவிட்டுப் போய்விட்டார். விலைமகள் தன்னுடைய பொருளை இழந்தும் எண்ணம் நிறைவேறாமல் வருந்தியிருந்தாள். ஔவையார் ஒருநாள், அவள் இல்லத் திற்குச் சென்றார். நிகழ்ந்ததை அறிந்தார். அவள் கொடுத்த சிறிது உணவைச் சாப்பிட்டு அவளிடம் அருள்கொண்டார்

பெண்ணாவாள் அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாள்அணியும் செம்பொற் சிலம்பே சிலம்பு "

என்று பாட்டை முடித்துக்கொடுத்துவிட்டுச் சென்றார். உதவி செய்யப்பெற்றவர்கள் தங்களுடைய பெருமைக்குத் தக்கவாறு தான் கைம்மாறு செய்யவேண்டு மென்னும் உண்மை அந் நாளில் ஔவையாரால் நன்கு அறியப்பட்டது.

உதவிவரைத் தன்றுதவி]

(ஔவையார் கதை)



218. சுகந்தன் கதை

சுகந்தன் என்பவன் காந்தமன் என்னும் சோழ மன்னனுடைய காமக் கிழத்தியின் மகன். காந்தமன் பரசுராமனுக் கஞ்சியதால் இவனை அரசனாகச் செய்துவிட்டுத் தான்
மறைந்திருந்தான். இவன் அரசியலைச் சீர்பெற நடத்தினான். செங்கோன்மை இவனிடம் சிறந்து விளங்கியது.

இவனுக்கு காமந்தன், கனகன் என்னும் பெயர்களையுடைய மக்கள் இருவர் இருந்தனர். இம்மக்கள் இருவரும் காமக்களிப்பிலாழ்ந்து காரிகையர் இடத்தில் தவறு புரிந்தனர்.

சுகந்தன் தவறு புரிந்தவர்கள் தன்னுடைய மக்கள் என்று சிறிதும் அருள் புரியவில்லை. இருவரையும் வாளால் வெட்டி வீழ்த்திவிட்டான். இவனுடைய சீரிய செங்கோன்மையைத்
தேவர்களும் வியந்து பாராட்டினர். குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எவரிடத்திலுங் கண்ணோட்டஞ் செய்யாமல் நடுவுநிலைமை அமைந்து செய்யத் தக்கதை ஆராய்ந்து செய்

வதே நீதி முறையாகும் என்பதனை இவன் உலகினுக் குணர்த்தி நின்றான்.

[செங்கோன்மை]

(சிலப்பதிகாரம்)




219. கங்கையணிந்த கதை

ஒருமுறை தேவி விளையாட்டாக இறைவனுடைய இரண்டு கண்களையும் மூடினாள். அதனால் உலகமெங்கும். இருள் மூடியது. இவ்வாறு மூடியது கடவுளர்க்குக் கணமேயாயினும் மக்கட்குப் பன்னெடுங்காலமாகியது. இறைவன் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து உலகத்தில் மூடிய இருளைப் போக்கினார். அச்சமுற்ற தேவி தன்னுடைய கையை எடுத்தாள். பத்து விரல்களினின்றும் வியர்வை தோன்றியது. அது பெருங் கங்கையாறாகப் பெருகியது. கங்கையின் பெருக்கைக் கண்டு திருமால் முதலிய தேவர்கள் அஞ்சினார்கள். அப்பெருக்கை அடக்குமாறு வேண்டிக்கொண்டார்கள். சிவபிரான் கங்கைப் பெருக்கத்தைத் தம்முடைய சடையொன்றிற் சூடி அடக்கினார். கங்கை தோன்றிய கதையை வேறு வேறு வகையாகவுங் கூறுவர்.

"பகிரதி சடைக்குட் சூட்டுபரமேசர்" (கங்கையைத் தாங்கியது]

(திருப்புகழ்)



220. கங்கையில் விழுந்த வேளாளன் கதை

கங்கையாற்றிலே யமுனை சரசுவதி ஆகிய ஆறுகல் வந்து கலக்கும் திரிவேணி சங்கமத்திலே ஒரு வேளாளன் நீராடிக்கொண்டிருந்தான். அப்போது தவறிப் பாதாளத்தி வீழ்ந்து கங்கையின் உறைவிடத்தை அடைந்தான். கங்கையைப் பலவாறு புகழ்ந்து வணங்கினான். கங்கை அவ்வேளாளனுக்குக் காட்சி கொடுத்தாள். தன்னுடைய மகன் என்கிற பற்றுதலால் பாராட்டிப் போற்றினாள். அவன் வேண்டிய மேன்மைகளையெல்லாங் கொடுத்து அவனை நிலவுலகிற் அனுப்பினாள்.

(கங்கை மகன்]

(தொண்டைமண்டல சதகம்)

